| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>திரு.மோகன்<br>த/பெ.திரு.ஆறுமுகம் | அ.வ.எண். 28/2010 | 27.07.2026 |

இ.ம.எண்.12/2026 மனு 17.07.2026 தேதியில் அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 4 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2ன் குறுக்கு விசாரணை

1) எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் எனக்கு படிக்க தெரியாது, ஆனால் அதில் உள்ள சங்கதிகளை எனக்க வழக்கறிஞர் படித்து சொன்னார், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வாதி ஆச்சிக்கண்ணுவிற்கு சொந்த ஊர் என்ன என்றால் இலால்குடி நாகம்மையார் தெரு. மேற்படி நாகம்மையார் தெரு வாதிக்கு பிறந்த ஊரா, திருமணமான ஊரா என்றால் திருமணமான ஊர்.

2) வாதியின் கணவர் பெயர் என்ன என்றால் மனோகர். மேற்படி மனோகருக்கும், வாதிக்கும் எப்போது திருமணமானது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் கணவர் பெயர் சேட்டு என்றாலும், அவர் திருமணமாகி பல்லப்புரத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல, எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்து வாதி மேற்படி நாகம்மையார் தெருவில் தான் உள்ளார்.

3) எனக்கு வாதி ஆச்சிக்கண்ணை பொறுத்து எந்த விவரமும் தெரியாது என்றாலும் வாதிக்காக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு வயது என்ன என்றால்

47−48 இருக்கும். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் எனது வயது 45 என்று கண்டுள்ளது என்றால் சரிதான், எனக்கு படிப்பில்லை அதனால் வயது சரியாக தெரியாது. எனக்கு வயது 45 கிடையாது என்றாலும், 35 வயது இருக்கும் என்றாலும் சரியல்ல.

4) 1994 ல் எனக்கு 10 வயது இருக்கும் என்றால் இருக்கும். 05.05.1994 ல் வாதிக்கும், பார்வதி, மணி, மூக்காயி, கந்தன் ஆகியருக்கு இடையே கிரையம் ஒப்பந்தம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன், 1994 ல் எனக்கு 10 வயது இருந்த நிலையில் மேற்படி கிரைய ஒப்பந்தம் குறித்து தெரிய எனக்கு வாய்ப்பில்லை என்றால் கிரைய ஒப்பந்தம் குறித்து தெரியாது. அப்படியானால் சன்னாசியை குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சன்னாசி இறந்த விவரம் தெரியும்.

5) சன்னாசி 1985−90 க்குள் இறந்தார் என்றால் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது, ஆனால் அவர் இருந்ததும், இறந்ததும் தெரியும். வழக்கு சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வாதி ஆச்சிக்கண்ணுக்கே. வழக்கு சொத்து வாதி ஆச்சிக்கண்ணுக்கே பாத்தியப்பட்டது என்பதற்கு வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தையோ, வருவாய் ஆவணத்தையோ பார்த்துள்ளேனா என்றால் வருவாய் ஆவணத்தை பார்த்துள்ளேன்.

6) பட்டா எண் என்ன என்றால் நியாபகம் இல்லை. வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.105 ஆனால் உட்பிரிவு தெரியாது. வழக்கு சொத்தின் பரப்பு தெரியுமா என்றால் கிழமேல் 24 அடி, தென்வடல் அளவு தெரியாது. வழக்கு சொத்தின் புதிய புல எண்.156/21, பரப்பு 1009 சதுர மீட்டர், பட்டா எண்.290 என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. வழக்கு சொத்தின் புதிய புல எண்.156/21ற்கு 4 முதல் 10 பிரதிவாதிகளின் தந்தை ராஜமாணிக்கம் மற்றும் 4 நபர்கள் பெயரில் பட்டா உள்ளது என்றால் வாய்ப்பில்லை.

7) மேற்படி புல எண்ணிற்கு வாதி ஆச்சிக்கண்ணு பெயரில் பட்டாவோ, பத்திரமோ கிடையாது என்றால் சரியல்ல, பழைய பட்டா உள்ளது. எனக்கு வழக்கு சொத்தை குறித்த விவரம் எந்த வருடத்திலிருந்து தெரியும் என்றால் 10 வருடம் இருக்கும், சன்னாசி இறந்த வீட்டிற்குள் இறப்பு செலவிற்கு கந்தன், மூக்காயி ஆகியோர் ஆச்சிக்கண்ணுவிடம் தொகை பெற்றனர், அப்போது எனது தாயாரும் உடன் இருந்தார். சன்னாசி இறக்கும் போது வழக்கு சொத்து வீடாக இருந்ததா, காலிமனையாக இருந்ததா என்றால் காலிமனையாகவே இருந்தது.

8) எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் வாதி தாவா சொத்தை சுவாதீனம் எடுத்து, குடிசை போட்டு குடியிருந்து அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளேன், எந்த காலக்கட்டத்திலிருந்து வாதி அவ்வாறு அனுபவித்து வருகிறார் என்றால் சுமார் 20–25 ஆண்டுகளாக அங்கு தான் குடியிருக்கிறார். மேற்படி குடிசைக்கு பேரூராட்சியில் வரி செலுத்துவதற்கு கிரைய ஆவணத்தின் அடிப்படையில் போடப்பட்டதா அல்லது வருவாய் ஆவணத்தின் அடிப்படையில் போடப்பட்டதா என்றால் கந்தன், மூக்காயி ஆகியோர் ஏற்படுத்தி கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் போடப்பட்டது.

9) கந்தன், மூக்காயி ஆகியோர் ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்லும் ஆவணம் கிரைய ஒப்பந்த ஆவணம் என்றாலும், மேற்படி ஆவணம்

சட்டத்தின் படி உரிமைமூல ஆவணம் கிடையாது என்றாலும், எனவே பேரூராட்சியில் வழக்கு சொத்தை மையப்படுத்தி வாதி பெயருக்கு வீட்டு வரி ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 2010 வரை எந்த வீடும் இல்லை என்றால் சரியல்ல, சமீபத்தில் தான் சுவர் மழையில் இடிந்தது, வழக்கு இருப்பதால் வீடு கட்டவிடவில்லை. 2010 ற்கு பிறகு வழக்கு சொத்தில் 4 முதல் 10 பிரதிவாதிகள் கட்டிய வீடு இடிந்து, தற்போது காலிமனையாக உள்ளது என்றால் சரியல்ல, வாதியை தவிர வழக்கு சொத்தில் யாரும் வீடு கட்டவில்லை.

10) வழக்கு சொத்தில் வாதி ஒத்த மின்விளக்கு பெற்றுள்ளதாக நான் சொல்வது பொய் என்றாலும், வழக்கு சொத்தை பொறுத்து வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லாததால் வாதிக்கு ஒத்த மின்விளக்கு பெற எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல, எனது சித்தப்பா பஞ்சாயத்து வார்டு மெம்பராக இருந்தார் அந்த காலத்தில் தான் வாதி ஒத்த மின்விளக்கு பெற்றார்.

11) வாதி ஒத்த மின்விளக்கு பெற்றதற்கான ஆதாரம் பார்த்துள்ளேனா என்றால் பஞ்சாயத்தில் வாதி மேற்படி ஒத்த மின்விளக்கு கோரி தாக்கல் செய்த மனுவை பார்த்துள்ளேன். மேற்படி மனுவை எந்த வருடத்தில், எங்கு பார்த்தேன் என்றால் எப்போது என்று நியாபகம் இல்லை, தெருவில் மின்விளக்கு அமைக்க வரும்போது மின்சார வாரிய ஊழியர் வைத்திருந்த பட்டியலில் பார்த்தேன். வாதிக்கு மின்இணைப்பு பெற உரிமை இல்லை என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12) சன்னாசி இறந்தபோது வாதிக்கும், கந்தன், மூக்காயி ஆகியோருக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்ட போது யார் யார் இருந்தனர் என்றால் சுலோச்சனாவின் தந்தை முத்து, தங்கவேலு, கந்தன், மணி, மூக்காயி, அவரது மகன் சுகுமார், கோவில் தாத்தா, ஆச்சிக்கண்ணு, மூக்காயின் உறவினர்கள் அனைவரும் இருந்தனர். மேற்படி ஒப்பந்தம் ஏற்பட்டது எனது வீட்டிற்கு அருகிலா என்றால் பணம் சன்னாசி இறந்த வீட்டில் தெருவில் வைத்து கொடுத்தார்கள், ஒப்பந்தம் ஏற்படுத்தியது தாலுக்கா அலுவலகத்தில், காரியத்திற்கு பிறகு பத்திரம் பதிந்து தருவதாக சொன்னார்கள், ஆனால் பலமுறை வாதி அழைத்தும், பதிந்து கொடுக்க வரவில்லை. தாலுக்கா அலுவலகத்தில் வைத்து என்ன எழுதினார்கள் என்றால் சன்னாசி இடத்திற்கு பணம் பெற்று கொள்வதாக, பின்னர் ஆவணம் பதிந்து தருவதாகவும் எழுதினார்கள், அதில் தங்கவேலும், இன்னும் சிலரும் கையொப்பம் செய்தனர், சன்னாசிக்கு வாரிசு கிடையாது.

13) வாதி பணம் கொடுத்தது மாலை 6 மணி அளவில் இருக்குமா என்றால் இல்லை, காலை 8 மணிக்கே வாதி பணம் கொடுத்துவிட்டார். தாலுக்கா அலுவலகத்தில் எழுதும் போது நான் செல்லவில்லை என்றால் சரிதான், அப்போது நான் சிறுவன். வழக்கு சொத்திற்கு சன்னாசி பெயரில் ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. எனக்கும், வாதிக்கும் நன்கு பழக்கம் என்றால் பழக்கம் கிடையாது, ஆனால் எனது ஊரில் வாதி குடியிருக்கிறார்.

14) வாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் குழந்தைகள் உள்ளனர், ஆனால் எத்தனை குழந்தைகள் என்று தெரியாது. வாதி நாகம்மையார் தெருவில் குடியிருக்கவில்லை என்றாலும், அவ்வாறு

குடியிருந்திருந்தால் அவர் தனது குழந்தையுடன் அங்கு வாழ்ந்திருப்பார் என்றாலும், மேற்படி விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் வாதியின் வீடு சற்று தள்ளியுள்ளது, அவர் குடும்பத்தை பற்றி தெரியாது.

15) வாதி நாகம்மையார் தெருவில் குடியிருக்கவில்லை என்றாலும், அதனால் தான் வாதியின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. 1994 ல் நான் சிறுவர் என்பதால் வழக்கு சொத்தை பற்றியோ, வாதியை பற்றியோ, இவ்வழக்கு தொடர்பாக 1994 ல் நடந்த சங்கதிகள் குறித்தோ எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.